திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்தப் பரிசுச் சீட்டினால், என்னுடைய சீட்டு, உன்னுடைய சீட்டு என்று தகராறாகி கோர்ட்டுக்குப் போனவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஒன்றிரண்டு வழக்குகள் உண்டு. அதிகமாக இல்லை.

ரயில்வே செஸ் நிதி

*331 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திற்கு 1971-ல் ஒதுக்கப்பட்ட ரயில்வே செஸ் நிதி இன்னும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணமென்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) 1972-ம் ஆண்டு மே மாதம் அரசு, கோவை மாவட்டத்திலிருக்கும் பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கு அம்மாவட்டத்தில் இருந்த ரெயில்வே செஸ் நிதியை குடிநீர் வழங்கல் மற்றும் தொடக்கப்பள்ளி கட்டிடங்கள் கட்டும் திட்டங்களுக்காக செலவிட ஒதுக்கீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பித்துவிட்டது. மேற்கூறிய திட்டங்களுக்காக பஞ்சாயத்து ஒன்றியங்கள் செலவிடும் தொகையை அடிப்படையாகக் கொண்டு அவ்வப்போது மாவட்ட ஆட்சியர் நிதி ஒதுக்கீடு செய்வார்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1971-ம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 1972-ஆம் ஆண்டு மே மாதம் கொடுக்கப் பட்டதாக அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அது அந்தந்த ஆண்டிலேயே கொடுக்கப்பட்டால் நடவடிக்கை எடுப்பதற்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வசதியாக இருக்கும். எனவே ஒவ்வொரு ஆண்டும் அந்த ஆண்டிலேயே கொடுக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எந் தெந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு எந்த அளவில் கொடுப்பது என்ற முழுப் பொறுப்பும் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக் கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கலாம் என்பதற்கு அரசாங்கம் உத்தரவு கொடுத்து விட்டது. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவர்தான் அதுபற்றி ஆராய்ந்து அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கேற்ப வழங்கி வருகிறார்கள்.

திரு. கே. ரங்கநாதன் : தலைவரவர்களே, இரயில்வே செஸ் நிதி உரிய காலத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கப்படாததால் பல

1972 ஆகஸ்ட் 25]

அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தடையாக இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செஸ் நிதியை எதிர்பார்த்து ஏற்கனவே எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை. புதிதாகச் சேரும் ஒன்று. இதன்மூலம் அதிக வாய்ப்புகளுக்கு வழிவகை செய்யப்படுகிறது.

தூ நீர் வழங்கல் மற்றும் துவக்கப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் திட்டங்களுக்காக முறையே ரூ. 32,72,950-ம் ரூ. 9,26,000-ம் பயன்படுத்திக் கொள்வதற்காக கோவை மாவட்ட ஆட்சியருக்கு அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

பேரூராட்சிகள்

*332. வினு.—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த (1) வள்ளல் நதி, (2) மயிலாடும் பாறை, (3) நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் ஊராட்சி மன்றங்களாக மாற்ற வேண்டும் என்று அந்த பேரூராட்சி மன்றங்களில் இருந்து தீர்மானங்கள் போட்டு அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனின், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) and (இ) போதிய வருவாய் இல்லை என்ற காரணத்திற்காக வள்ளல் நதி பேரூராட்சி 15–2–1972 தேதி 14-வது தீர்மானத்தில் வள்ளல் நதி பேரூராட்சியை வள்ளல் நதி, ஆத்தங்கரைப்பட்டி, எட்டப்பராஜபுரம் என்று மூன்று ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், மயிலாடும்பாறை பேரூராட்சி 24–3–1972 தேதி 99-வது தீர்மானத்தில் மயிலாடும் பாறையை 10 ஊராட்சிகளாக பிரிக்கும்படியும், நரசிங்கபுரம் பேரூராட்சி 23–10–1970ந் தேதி 187-வது தீர்மானத்தில் நரசிங்கபுரத்தை ஊராட்சியாக மாற்றும்படி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. ஆனல், மாவட்ட ஆட்சித் தலைவரிடமோ அல்லது அது சம்பந்தப்பட்ட மற்றவரிடமிருந்தோ இத்தீர்மானங்களின் மேல் செயல் குறிப்புகள் வரவில்லை.

திரு. நா. வெ. குருசாமி: தலைவரவர்களே, வள்ளல் நதி, மயிலாடும் பாறை, நரசிங்கபுரம் இந்த மூன்று பேரூராட்சி மன்றங்களின் பரப்பளவு அதிகமாகும். ஒரு உறுப்பினர் 15 மைல், 20 மைல் கடந்து ஊராட்சி மன்றக் கூட்டத்திற்கு வரவேண்டியிருக்கிறது. இந்த நிலையிலே மேலும் அங்கு சிறுசிறு கிராமங்களாக, 10, 15 வீடுகள் இருப்பதால்